மாஜமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

இந்நாள் பொதுச்செயலாளரும், முன்னாள் பொதுச்செயலாளரும்

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 2—10—60 ஒலி 48

சிறப்பு வாய்ந்த பொதுக்குழுவைப் பாராட்டுகிறோம்!

★

நாம், நமது பேரறிஞர் அண்ணா அவர்களை பொதுச் செயலாளராகப் பெற்று, பெருமையும், பூரிப்பும் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறோம்!

மிக்கச் சிறப்புவாய்ந்த நமது ஜனநாயக முறைப்படி, மிக்கச் சிறப்பு வாய்ந்த பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களை, மிக்கச் சிறப்பு வாய்ந்த பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்து, மிக்கச் சிறப்புவாய்ந்த திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பெருமையைக்காத்து, மிக்கச் சிறப்புவாய்ந்த அதன் இலட்சியத்திற்கு புதிய திருப்பத்தைத் தந்து—திராவிடம் தீட்ட இருக்கும் மிக்க சிறப்பு வாய்ந்த வரலாற்றுச் சுவடியில் இடம்பெற இருக்கும் மிக்கச் சிறப்புவாய்ந்த நமது பொதுக் குழுவை, நாடும், நாட்டோடு சேர்ந்து நாமும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்!

பெருமதிப்பிற்குரிய பொதுக் குழு உறுப்பினர்களுக்கு புகழாரம் சூட்டி வாழ்த்துகிறோம்! உங்களுக்கு பொன்னாரம் சூட்டி பெருமை படைகிறோம்! "வாழ்க, பொதுக்குழு உறுப்பினர்களே! நீங்கள் நீடூழி வாழ்க! என்று உங்களை வாயார வாழ்த்தி மகிழ்கிறோம்!

காளைகளைப் போல் எக்களித்துத் திரிந்த கனம்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்த உங்களை, உங்களின் திறமையை, உங்களின் ஆற்றலை, உங்களின் பெருமையை, உங்களின் அறிவு சார்ந்த முடிவை எத்தனை முறை புகழ்ந்தாலும், எத்தனை முறை பெருமை பேசினாலும் தகும்!

நமது மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் பொதுச் செயலாளராகப் பெற்றதைக்குறித்து பெரு மகிழ்ச்சியடைந்து இடக்கிறோம்! நமது மாற்றார்களோ பெரும் கொந்தளிப்பில் சிக்கி, பெரும் திகிலும் திகைப்பும் கொண்டு, மனம் புழுங்கி சாகாமல் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள்!

"ஏதோ நடக்குமென்று எண்ணினோம், அது ஏதோ நடந்துவிட்டதே" என்று ஏங்கி ஏங்கித் தவிக்கிறார்கள்! "இனி என்ன செய்வது, இனி ஏது செய்வது" என்று புரியாமல் திகைத்து நிற்கிறார்கள்!

"நான்கு நாட்கள் என்று கணித்தோம்—அது கணவன், மனைவி ஊடல் என்று அறியாது போனோம்" என்று பலர் பின்புத்தியை நினைத்து நினைத்து இப்போது வருந்துகிறார்கள்!

"அண்ணாதுரை சொல்லுவது சரியாகத்தானிருக்கிறது—அங்கே என்ன நடந்தாலும் முடிவில் அண்ணா என்கிறார்கள்—அங்கே ஏது நடந்தாலும் முடிவில் தம்பிகள் என்கிறார்கள்! இந்த பாசம், இந்த பற்று—ஐயோ நம்மிடமில்லையே—எங்கு நோக்கினும், இங்கே சிலம்பம் விளையாடும் ஆந்திரத்து சுப்பாரெட்டிகளைத்தானே காண்கிறோம்" என்று நமது கனம் காமராசர் முதல் கக்கன் வரை எண்ணி எண்ணி வேதனையடையக்கூடும்!

நம்முடைய பொதுக்குழு எடுத்த முடிவு, இப்படி மாற்றார்களையும், வேற்றார்களையும் நடுங்க வைத்திருக்கிறது! நாம் இப்படி நடுங்க வைத்தால் மட்டும் போதாது. அவர்களை நலிய வைக்க வேண்டும். நாட்டின் ஆட்சி பீடத்திலிருந்து அவர்களை விரட்டவும் வேண்டும்! அதற்கான பணியில நமது பொதுக்குழு உடனடியாக இறங்க வேண்டும்!

அவர்களை விரட்டுவது, நாம் வாழ அல்ல—நாடு வாழ, நாட்டு மக்கள் வாழ!

அவர்களை விரட்டியடிப்பது நாம் பதவியில் அமர அல்ல, நல்லவர்களைப் பதவியில் அமர்த்த! இதனை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்!

"நாம் ஆண்ட பரம்பரை" என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொண்டு விட்டார்கள்—"நாம் ஏன் அடிமையாக இருக்க வேண்டும்" என்ற வினாவையும் அவர்கள் எழுப்பத் தொடங்கி விட்டார்கள், எனவேதான் நாடு நம் பக்கம் நிற்கிறது—நாட்டு மக்களும் நம்மிடம் வருகிறார்கள்!

நம்மைத் தவிர இந்த நாட்டை வாழ்விக்க வேறு நாதியில்லை, இந்த நாட்டு மக்களுக்கு வேறு கதியுமில்லை!

நாம் மட்டும்தான் சொந்தம் பேசுபவர்கள், பந்தம் கொண்டாடுபவர்கள்! நாம் மட்டும்தான் மொழிப் பற்றுக் கொண்டவர்கள், இனப்பற்றுக் கொண்டவர்கள்! நாம் மட்டும்தான் தமிழ் என்பவர்கள், தாயகம் என்று பேசுபவர்கள்! எனவேதான் நம்மையே நம்பிக் கிடக்கிறார்கள் இந்த நாட்டு மக்கள்! எனவேதான் நம்மையே நத்திக் கிடக்கிறார்கள் இந்த நாட்டு மக்கள்! அந்த நாட்டுமக்களை நாம் வாழ்விக்க வேண்டும்! அந்த நாட்டு மக்கள் வாழும் தாயகத்தை, திராவிடத்தை நாம் விடுவிக்க வேண்டும்!

இந்தப் பெரும் பயணத்தைத் துரிதமாக முடிக்கத்தான் நாம், நமது பேரறிஞர் அண்ணா அவர்களைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்!

நம்மை எதிர்நோக்கி நிற்கும் பெரும், பெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நம்மை எதிர் நோக்கி நிற்கும் பெரும் பெரும் நெருக்கடிகளை எளிதாக சமாளிப்பதற்கும் ஏற்ற ஒரு தலைவரை நாம் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்!

நாம் இப்படிக் கூறுவதால், இங்கு வேறு யாருக்கும் அந்த ஆற்றலும், திறமையும் இல்லை என்பதல்ல பொருள்! இங்குள்ள தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் உள்ள ஆற்றலை, திறமையை வேறு எங்குமே, எவரிடத்திலுமே காண முடியாது!

ராஜதந்திரிகள் நிறைந்த நாட்டில் போர்க்காலம் வருகிறது என்றால், போர்ப்பறை ஒலிக்கிறது என்றால் சர்ச்சிலைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்கள்! இதனால் அட்லிக்கும், மாக்மில்லனுக்கும், அந்தோணி ஈடனுக்கும் ஆற்றலில்லை என்பது அல்ல பொருள்! திறமையில்லை என்பதல்ல அர்த்தம்! என்றாலும் எங்கள் வழிகாட்டியின் மூலமே, எங்கள் பெருந்தகையாளர் மூலமே எதையும் சாதிக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் நாங்கள்! அதுதான் எங்களுக்குப் பெருமை! அதுதான் எங்கள் இயக்கத்திற்கும் பெருமை!

அறிஞர் அண்ணா பொதுச் செயலாளராக வந்திருப்பது மாற்றார்களுக்கு பெரும் அதிர்ஷ்டமாகும்? நம்மைக் காட்டிலும் அவர்களுக்கே பெரும் மகிழ்ச்சி ஏற்படவேண்டும்! பெரும் பூரிப்பும் உண்டாக வேண்டும்!

சம்பத்திடம் பெற முடியாத சலுகையை, கருணாநிதியிடம் காணமுடியாத பரிவை, மதியழகனிடம் பெற முடியாத அன்பை, அன்பழகனிடம் அடைய முடியாத அரவணைப்பை எங்கள் அண்ணாவிடம் நீங்கள் பெற முடியும்! நீங்கள் மிக்க பாக்யசாலிகள், நீங்கள் மிக்க அதிர்ஷ்டசாலிகள்!

எனவே உங்களுக்கு கிடைத்துள்ள இந்த பெரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' அதுதான் புத்திசாலித்தனமாகும்! அதுதான் பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுத்த ஆச்சாரியாரும், நவகாளியில் தண்டி யாத்திரை செய்த காந்தியாரும் உங்களிடத்திலிருந்ததற்கு அடையாளமாகும்!

(7ம் பக்கம் பார்க்கவும்)

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம்!

கண்ணீராலும், செங்நீராலும் அது வளர்ந்து நிற்கிறது!

நெருப்பாற்றில் நீந்த வேண்டுமா? ரத்தக் குளத்தில் மிதக்க வேண்டுமா?

எதற்கும் அஞ்சாதவர்கள் என் தம்பிமார்கள்; இந்த நெரிசலிலே அகப்பட்டால் தூள்தூளாகி நொறுங்கிவிடுவீர்கள் மாற்றார்களே, ஜாக்ரதை!

பொதுச்செயலாளர் அண்ணா முழக்கம்!

சென்னை 26-9-60ம் தேதி யன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியது வருமாறு:

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே! இன்றைய தினம் இங்கு நடக்கின்ற இந்த திராவிட முன்னேற்றக்கழகப்பொதுச்செயலாளர் பாராட்டு விழாவில்—என்னுடைய தம்பிமார்கள் அனைவரும், ஒவ்வொரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு என்னையும் பொதுச் செயலாளராகத்தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்துவிட்டு—இங்கு என்னை வைத்துக் கொண்டே பாராட்டுரைகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரொம்ப சங்கடமான நிலைமை தான்! இதற்காக என் தம்பிமார்களைக் கடிந்து கொண்டும் இருக்கிறேன்! இனியும் கடிந்து கொள்ளத்தான் செய்வேன்!

இந்த முடிவு நாட்டு மக்கள் எதிர்பாராத முடிவு என்று சொல்லப்படுகிறது!

ஒரு பத்திரிகை எழுதுகிறது, —"தி. மு. க. பொதுச் செயலாளர் தேர்தல் திடீர் திருப்பம்" என்று! அதற்காக அந்தப் பத்திரிகையின் மீது எனக்கு ஏதும் கோபமில்லை! அந்தப் பத்திரிகைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் — நல்ல தமிழில் எழுதுங்கள் என்று! திருப்பம் என்றாலே திடீரென்று தான் ஏற்படும்! ஒரு திருப்பத்தில் திருப்ப வேண்டுமென்றால். 2 மைல், 3 மைல்களுக்கு முன்னாலேயே திருப்பமாட்டார்கள்! திருப்பம் வரும்போது திடீரென்றுதான் திருப்புவார்கள்!

திருப்பம் என்று எழுதினாலே போதும்! திடீர் திருப்பம் தேவையில்லை!

தம்பி சம்பத் அவர்கள் சொன்னார்கள் — திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெரும் பிளவும் சிக்கலும் இருப்பதாக மாற்றார்கள் நினைப்பது தவறு என்று! வாதத்திற்காக மாற்றார்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்கிறேன்! சிக்கல் இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள்! அந்த சிக்கலை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்! அப்படியே வைத்திருக்கச் சொல்லுகிறீர்களா? தந்திரமாக அந்தச் சிக்கலை போக்க என்ன வழி என்பதை கண்டு பிடிக்கத்தானே வேண்டும்!



நல்ல இசைவாணன் ஒருவன் வீணையை மீட்டி இசையை எழுப்புகிறான்! நாதங்கள் தரும் நரம்புகளைத் தடவி நாதத்தை எழுப்புகிறான்! அந்த நாதம் தரும் இசை சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள—சரியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒரு முறை நரம்புகளை இழுத்துப் பார்த்து, சரியாக இல்லாவிட்டால் நரம்புகளை சரி செய்து, தளர்ந்திருந்தால் நரம்புகளை முறுக்கி, சரி பார்த்து வீணையை மீட்டி நல்லஇசையை இசைக்கிறான்! இதிலே நரம்புகள் அறுந்திருந்தாலும் அதை சரி செய்ய முடியாது என்பதல்ல, அது ராகத்தை எழுப்பாது என்பதும் அல்ல!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சாதாரண அரசியல் இயக்கம் மட்டுமல்ல; அது ஒரு விடுதலை இயக்கமும் ஆகும்! இதில் இருப்பவர்கள் யாரும் அலங்கரிப்பதற்காக இருக்கவில்லை! அனைவருக்கும் பொறுப்புணர்ச்சி உண்டு. இதில் உள்ளே புகுந்து யாராவது குழப்பம் விளைவிக்க முயன்றால் இடையிலே சிக்கி கூழாகிப் போய்விடுவார்கள்! "இவருக்கும், அவருக்கும் பேதமாமே—

(8ம் பக்கம் பார்க்க)

பல பிணங்களையும், கல்லறைகளையும் கண்ட பின்புதான் இன்று வளர்ந்திருக்கிறோம்!

கத்திகளைத் தூக்குவதால் ஒரு விடுதலை இயக்கம் அழிந்துவிடாது!

அரசியலில் ஈடுபடுவது என்பது உல்லாசமாக இருப்பதற்கல்ல; பல இன்னல்களைச் சந்திப்பவன்தான் சரியான அரசியல்வாதி!

சென்னையில் கொட்டும் மழையில்

டி. கே. சீனிவாசன் முழக்கம்!

சென்னை 76-வது வட்டம் உதய சூரியன் படிப்பகமும், ஈ. வெ.கி. சம்பத் இரவுப்பள்ளியும் சேர்ந்து சென்னை திருவல்லிக்கேணி சூரப்பமுதலித் தெருவில் அறிஞர் அண்ணாவின் பிறந்த தின விழாவும், திராவிட முன்னேற்றக் கழக பதினோராவது ஆண்டுவிழாவும் 24-9-60ம் தேதி மாலை 6 மணிக்கு தோழர் கபிலன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் இயக்கத்தோழர்கள் பலர் கீதங்கள் பாடினார்கள்,

தலைவர் முன்னுரையாகப் பேசும்போது கழகம் தோன்றிய நிலைபற்றியும், அது வளர்ந்து வரும் விதம்பற்றியும், எதிரிகள் கையாண்டு வரும் இழிசெயல் பற்றியும் மிக விளக்கமாகவும், விரிவாகவும் பேசினார்.

பின்னர் தோழர்கள் அரங்கநாதன், பிரகாசம், நீலநாராயணன், நகராண்மைக் கழக உறுப்பினர் சிட்டிபாபு ஆகியோர்கள் இன்றைய அரசியல் நிலைமைகள்பற்றியும், மாற்றுக் கட்சியின் போக்கு பற்றியும், அரசியலாரின் திறமையற்ற செயல்கள் பற்றியும், நாட்டுமக்கள் ஆட்சியாளர்களின் போக்கால் அவதியுறும் தன்மைகள் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்கள்.

பின்னர் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவரும், சிறந்த பேச்சாளரும். பொதுக்குழு உறுப்பினருமான தோழர் டி. கே. சீனுவாசன் நீண்ட கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இப்போது பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. நீங்களெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு வீடுகளின் ஓரங்களிலும், திண்ணைகளிலும். தெருவின் இடுக்குகளிலும் நின்று கொண்டிருக்கிறீர்கள். இதற்கிடையில் நான் பேச வந்திருக்கிறேன் நான் தொடர்ந்து பேசலாமா கூட்டத்தைக் கலைத்து விடலாமா என்பதை அறிய விரும்புகிறேன். (இவ்வாறு டி. கே. சீனுவாசன் கேட்டதும் மழையின் தொல்லைக்கு ஆட்பட்டிருந்த மக்கள் "பேசுங்கள்—பேசுங்கள்" நாங்கள் எவ்வளவு மழை வந்தாலும் கேட்கிறோம் என குரல் கொடுத்தனர். பின்னர் அவர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

நம்முடைய கழகம் தோன்றி 11 ஆண்டுகள் ஆகிறது அன்று நாம் கடும் மழையில்தான் நமது கழகத்தைத் துவக்கினோம். இன்று ஆண்டு விழாவும், அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவும் கொண்டாடுகிறோம். இன்றும் கொட்டும் மழையில் தான் கூடியிருக்கிறோம். நீங்களெல்லாம் குடைகளைப் பிடித்துக் கொண்டும், திண்ணைகளிலும் சுவற்றோரங்களிலும் நிற்கிறீர்கள். பெரிய மழைபெய்தாலும் நடுத்தெருவில் நிற்கிறீர்கள் நம்முடைய பழைய வரலாற்றை நினைவுபடுத்தவே இவ்வாறு நிற்கிறீர்கள். நீங்கள் ஒரு விடுதலை இயக்கத்தில்—ஒரு நாட்டின் விடுதலை இயக்கத்தில் சார்ந்திருப்பதால் "எந்த இன்னல்கள் வந்தாலும் அதை ஏற்போம்" என்ற தியாக உணர்ச்சியில் இருக்கிறீர்கள், இல்லாவிட்டால் இந்த மழை பெய்ய ஆரம்பித்ததும் ஓடி இருப்பீர்கள். இது உங்களது வீரத்தையும், நாட்டுப் பற்றையும் காட்டுகிறது.

இவ்வளவு கடுமையான மழை பெய்தும் இவ்வளவு பேர் நிற்கிறீர்கள், மழை பெய்யாதிருந்தால் இன்னும் அதிகம் பேர்கள் கூடியிருப்பீர்கள் காங்கிரசுக்கு எப்படியிருந்தாலும் கூடடம கூடுவதில்லை. அதனால்தான் அவர்கள் நம்மீது பொறாமை கொள்கிறார்கள், அந்தப் பொறாமையால் நம்மைத் தாக்கவும், கொல்லவும், அழிக்கவும் முற்படுகிறார்கள். அவர்கள் என்ன செய்தாலும் நாம் வளர்கிறோம். நமது கழகம் மக்களிடம் செல்வாக்கு பெற்று ஓங்கி நிற்கிறது.

இன்று நாம் புத்தியை உபயோகப்படுத்துகிறோம், காங்கிரஸ் கத்தியைக் கையில் எடுக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் கத்தியை கையில் எடுக்கத் தெரியாமலோ. முடியாமலோ, அது சும்மா இருக்கவில்லை.

எனக்கு முன் பேசியவர்களும் கூறினார்கள் "எங்களுக்கும் கத்தியை எடுக்கத் தெரியும். நாங்களும் கத்தியைக் கையில் எடுத்தவர்கள்தான்" என்று இன்று அதுகூடாது அந்த நிலை அரசியலில் கூடாது. காங்கிரசார் அரசியயில் தப்புக் கணக்குப் போட்டு செயலாற்றுகிறார்கள். நாம் அந்தக் கணக்குப் போடவேண்டாம்.

நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு சரியான வழிகாட்டி வருகிறார்கள். நாம் நல்ல வழியில் செல்கிறோம் நமது கணக்கு நல்ல கணக்காக இருக்கட்டும்.

எந்த விடுதலை இயக்கமும் அடி, உதைபட்டுத்தான் வளர்ந்திருக்கிறது. அகில உலக அரசியல் வரலாறுகளே நமக்குச் சான்றுகளாகக் காட்டி வருகிறது அடி, உதை, பிணம் இவைகள்தான் நாட்டு விடுதலைக்கும், ஒரு இயக்கம் வளர்வதற்கும் ஒரு எடுத்துக் காட்டு.

அரசியல் என்பது பூந்தோட்டத்தில் உல்லாசமாக இருப்பது என்பதல்ல. அது பல பிணக்குவியல்களையும், இரத்த ஆறுகளையும், பல இன்னல்களையும், தொல்லைகளையும் சந்தித்தால் தான் அது சரியான அரசியல் கட்சியாகும். அது ஒரு விடுதலை இயக்கமாகும். இந்த நிலை நமது கழகத்திற்கு இன்று இருக்கிறது. நாம் பல சாவுகளைப்

(9ம் பக்கம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று புது சக்தியைப் பெற்றிருக்கிறது; புது வலிவைப் பெற்றிருக்கிறது!

தரங்கெட்ட அரசியல்வாதிகளின் தரை விளையாட்டைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படாதீர்கள்!

அறிஞர் அண்ணாவைப் பாராட்டி புது முறுக்கோடு செயலாற்றப் புறப்படுவோம்!

சென்னையில் சம்பத் முழக்கம்

அன்புள்ள தலைவர் அவர்களே! இன்றைய தினம் இங்கு நடைபெறுகின்ற இந்த விழாக் கோலத்தைக் கண்டு யாரும் வியப்படையவில்லை. இது ஒன்றும் திராவிட முன்னேற்றக் கழகம் காணாத ஒரு பெரும் காட்சியுமல்ல.

திராவிட முன்னேற்றக்கழகம் எதைச் செய்தாலும், அது விழாக்கோலமாகத்தான் அமையும்! திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற சிறு கூட்டங்களானாலும், பெரும் மாநாடு ஆனாலும் அவைகளுக்கு ஏற்படுகின்ற சிறப்பே தனியானதோர் சிறப்பாகும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் மட்டுமின்றி, தமிழகத்தின் அரசியலிலும் ஒரு புதுத் திருப்பம் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது! இந்த நாளை தமிழகத்து மக்கள் அனைவரும் விழாக்கோலம் பூண்டுக் கொண்டாடுவதில் என்ன வியப்பிருக்கிறது!

"இந்த நாட்டில் பெரும் சக்தியாக விளங்கி வரும் திராவிட முனனேற்றக் கழகத்தில் குழப்பம் உண்டாகிவிட்டது, பிளவு ஏற்பட்டுவிட்டது, பெரும் கொந்தளிப்பு உண்டாகிவிட்டது, இனி அது அழியத்தான் போகிறது! மண்ணோடு மண்ணாய் மறையத்தான் போகிறது" என்று பலர் ஆருடம் கணித்தார்கள். பலர் பகற்கனவு கண்டார்கள்! நம்மிடமுள்ள ஒற்றுமை குலைந்து விட்டது, நம்மிடமுள்ள பாச உணர்ச்சி மறைந்து விட்டது "என்று அரசியல் தகிடுத்தத்தக் காரர்கள் மனம் பேதளித்து திரிந்தார்கள்.

அவர்களுடைய எண்ணத்தில் பெரும் இடிவிழும் வகையில், அவர்கள் கட்டிய மனக் கோட்டைகள் அத்தனையும் சுக்கு நூறாகி உடைந்து சிதறி விடும் வகையில், நாம் பெருமை போடும், பூரிப்போடும் இங்கே விழாக் கோலம் பூண்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எந்த காரணம் என்று எங்களுக்குச் சொல்லத் தெரியவில்லை என்ன காரணமென்றும் எங்களுக்குப் புரியவில்லை – அது ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றார்களிடத்தில் பொறாமை உணர்ச்சியைத்தான் ஏற்படுத்தி வந்திருக்கிறது

தோன்றிய காலம் முதல், இன்றுவரை மாற்றார்களிடத்தில் பொறாமை உணர்ச்சியைத் தான் வளர்த்து வந்திருக்கிறது!

1949ம் ஆண்டு நாம் பிறந்த இடத்திலிருந்து பிரிந்து வந்த நேரத்தில் பிறந்த இடத்திலேயே பொறாமை உணர்ச்சியை ஏற்படுத்தியது! இவர்கள் பிரிந்து செல்லுகிறார்கள், ஒரு நாளாவது வாழ்வார்களா? என்று பொறாமை உணர்ச்சியோடு சபித்தார்கள். நாம் மிக்க பொலிவோடும், வலிவோடும் வளர்ந்தோம்!

அடுத்த பல கட்டங்களிலும், நாம் அடைந்துள்ள வளர்ச்சியின் மூலம், நாம் பெற்றுள்ள பொலிவின் மூலம் பலருக்குப் பொறாமை உணர்ச்சியை உண்டாக்கிற்று.

சென்னை மாநகராட்சி தேர்தலில் கலந்து கொண்ட போது —"ஏன் இவர்கள் தேர்தலில் நிற்கிறார்கள், இவர்களுக்கு யார் ஆதரவு தரப் போகிறார்கள்! என்று பலரும் கூறினார்கள்! நாம் பெரும் பாலான இடத்தைப் பிடித்து 45 உறுப்பினர்களை உள்ளே அனுப்பி வைத்தோம்! குருட்டுப்பூனை விட்டத்தில் தாவியது போல் உங்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது! ஆனால் உங்களுக்கு மேயர் பதவி எங்கிருந்து கிடைக்கப் போகிறது என்று கூறினார்கள்!

நாம், நமது அ. பொ. அரசுவை மேயராக்கினோம்!

"சரி, சரி! முதல் கட்டத்தில் தப்பித்துக் கொண்டு விட்டீர்கள்—அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்" என்று கூறினார்கள்!

அடுத்து நமது அப்துல்காதர் மேயராக வந்தார்! இப்போது அடுத்த மேயரைப்பற்றிப் பேசி வருகிறார்கள்!

(12ம் பக்கம் பார்க்க)

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

20

உதய சூரியனுடைய பேச்சைக் கேட்ட பிறகு டாக்டருடை உள்ளம் வெகுவாகக் குழம்பி விட்டது! உதயசூரியன் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமோ-சேச்சே அப்படி இருக்காது! தனவந்தர் தருமலிங்கம்பிள்ளையைப் பார்த்தால் அப்படி ஒன்றும் கெட்ட மனிதனுகத் தெரியவில்லையே! என்று தனக்குத் தானே ஒரு கணம் ஆறுதல் சொல்லி தன் மனதைத் தேற்றிக் கொள்வான்!

ஊதய சூரியன் சொன்னதெல்லாம் ஏன உண்மையாக இருக்கக் கூடாது! மகளைப் போல் தனே அப்பனும் இருபான். மானே தேனே மயிலே, குயிலே என்றெல்லாம் வர்ணித்தோமே அந்த சாந்தா என்னவானுள்! ஆசைக் காட்டி மோசம் செய்த அந்த வஞ்சகியைப் பெற்றெடுத்தவன் மட்டும் எப்படி உத்தமனுக இருக்க முடியும்!

"இந்த காலத்தில் வெள்ளை வேட்டிகளை நம்பி, மடிப்புக் கலையாத சலவை சட்டைகளை நம்பி எத்தனையோ பேர்கள் கெட்டிருக்கிறுர்கள்! இந்தக் காலத்தில் சுகாதார வசதிக்காக யாரும் வெள்ளை உடை அணிவதில்லை! ஆடம்பரத்திற்கும், பகட்டைக் காட்டிக் கொள்வதற்கும், ஊரை ஏமாற்றுவதற்கும்தான் வெள்ளை உடை அணிகிறுர்கள்! நான் கணு செலவில் ஆடையின் அழுக்கைப் போக்கிக் கொள்ள முடியும்! ஆனுல் உள்ளத்திலுள்ள அழுக்கை எத்தனை நான் கணு செலவிட்டாலும் போக்க முடியாது! அதற்குத் தனி பண்பு வேண்டும். அதற்குத் தனி மனிதாபிமானம் வேண்டும்" என்று உதயசூரியன் அடிக்கடி சொல்லுவானே அது உண்மையிலேயே உண்மையாகத் தான் இருக்கிறது!

மருத்துவ மனையிலிருந்து டாக்டர் ராஜன் நேரக வீட்டிற்குச் சென்றுன்!

தந்தை கந்தன்—"வாப்பா, வா" என்று வரவேற்றுன்! வாசற்படியில் நின்று வரவேற்கும் தன் தந்தையைக் கூட கவனிக்காமல் உள்ளே நுழைந்தான! ஒரு சாய்வு நாற்காலியில போய் படுத்துக கொண்டான! சுருள் சுருளாக வந்தக் கொண்டிருந்த சிகரெட்டின் புகை அந்த இடத்தையே மேகமண்டலமாக்கியது!

சாதாரண ராஜனுக இருந்த காலத்திலும், டாக்டர் ராஜனுக மாறிய பின்பும் தன் தந்தையின் முன்பு சிகரெட் பிடித்ததே கிடையாது! தந்தைக்கு அவன் தனி மரியாதை செலுத்துபவன்! தந்தை இருக்கும் பக்கம்கூட செல்ல மாட்டான்! அத்தனை மரியாதையுடையவன் இன்று சாய்வு நாற்காலியிலேயே படுத்துக் கொண்டு சிகரெட் பிரேதங்களை வரிசை வரிசையாகக் குவித்துக் கொண்டிருக்கக் காரணமென்ன?

சிகரெட் என்று ஒன்று இல்லாமலிருந்தால் பெரும் பெரும் மேதைகளெல்லாம் இந்நேரம் கவலைகளால் செத்து மடிந்தே போயிருப்பார்கள்!

ராஜனுடைய பக்கத்தில் கிடந்த சிகரெட் துண்டுகளின எண்ணிக்கைப் பெருகிக் கொண்டேசென்றன! பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த அவனுடைய தந்தை அந்த வெண்சுருட்டுப் பிரேதங்களைப் பொறுக்கிக் கொண்டே இருந்தான்!

ராஜனுடைய உள்ளமோ அந்த சிகரெட துண்டுகளைப் போல் சிதறிக் கிடந்தன! அப்போதும் அவன் சிகரட் பிடிப்பதை நிறுத்தவில்லை! சிகரட் பிடித்து புகையை உள்ளே இழுத்து ஸ்டைலாக வெளியே விட்டுக கொண்டிருக்தான்! சிகரெட் துண்டின் நெருப்பு அவன விரலை சுட்டு "இன்னும் ஏன் என்னை வட்டிவதைககிறுய்" என்று சொல்லாமல் சொல்லிற்று! அந்த சிகரட் துண்டை தூக்கி எறிந்தான்! பக்கத்திலிருந்த 'பிளேயர்ஸ்' சிகரட் டின்கள் மீது அவன் பார்வைத் திரும்பிற்று! ஒரு சிகரெட் டின்னைத் திறந்தான். அது வெறும் காலி டின்னுகவே இருந்தது. அடுத்த டின்னையும் திறந்தான்; அதுவும் அப்படித்தான் இருந்தது! அதற்குப் பக்கத்திலிருந்த டின்னையும் திறந்துப் பார்த்தான். அதுவும் அவனை மோசம் செய்து விட்டது! நேசமும், பாசமும் கொண்ட சாந்தாவின் பிரிவுகூட அவனுக்குப் பெருங்கவலையைத் தரவில்லை! இந்த சிகரட் டின்கள் செய்த சதிவேலைகளே அவனுக்குப் பெரும் கவலையை அளித்தது!

"சிகரட் வாங்கிவர யாராவது இருக்கிறுர்களா?' என்று திரும்பிப் பார்த்தான்! தன் தந்தை, தான் பிடித்துப் போட்ட சிகரட் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பெரும் திகிலடைந்தான்!

"அப்பா! என்ன இது!"

"பரவாயில்லை ராஜன் பரவாயில்லை!"

"என்ன காரியம் செய்கிறீர்கள்!" ராஜனுடைய உடல் பயத்தால் வியர்த்திருந்தது!

"ஒன்றுமில்லை ராஜன், இதில் ஒன்றும் தவறில்லை" ராஜனுடைய தந்தை கந்தன் அவன உள்ளத்தை சாந்தப்படுத்திஞன்,

சிறிது நேரம் அங்கு வெறும் சுடுகாட்டு அமைதியே நிலவிற்று. ராஜன் மீண்டும் சாய்வு நாற்காலியில் போய் படுத்துக் கொண்டான்!

பெற்ற பாசமல்லவா! கந்தனுடைய உள்ளம் அதை சகித்துக கொண்டிருக்க முடியவில்லை! ஏன் அவன் இப்படி இருக்கிறுன்!' அந்த சீமான் வீட்டு சிங்காரி போனபோது கூட இவன் கவலைப்படவில்லையே! இப்போது உத்தியோகம் பார்க்கிறுன் சம்பாதிக்கிறுன் அவனுக்கென்ன கவலை' என்று கந்தனுடைய உள்ளம் பெரும் கவலையால் வாடிக்கிடந்தது!

"ராஜன், ராஜன்! ஏனப்பா இப்படி படுத்தே இருக்கிறுய்! என்ன கவலை உனக்கு?" கந்தன் தன் மகனைத்தேற்றிக்கொண்டிருந்தான்!

ராஜன் பதில் பேசவில்லை! தந்தையினுடைய பரிவு ராஜனுடைய கண்களைக்கலங்கவைத்துவிட்டது!

"அழாதே ராஜன், அழாதே!', கந்தன் ராஜனுடைய கண்களைத் துடைத்துக் கொண்டே நின்றுன்!

பரிவும், பாசமும் காட்ட காட்ட ராஜன் விக்கியே அழ ஆரம்பித்துவிட்டான்!

"படித்த பிள்ளை இப்படி அழலாமா? என்ன நடந்தது? சொன்னுல்தானே தெரியும் ராஜ!ன்" கந்தனுடைய கண்களும் கலங்கின!

"அப்பா! நீங்களும் ஏன் அழுகிறீர்கள்? என் தலைவிதி நான் அழுகிறேன்! உங்களுக்கு ஏனப்பா இந்த விதி!" ராஜன் தந்தைக்குப் பரிவு காட்டினுன்!

"உனக்கென்னப்பா அப்படி தலை விதி வந்துவிட்டது! ராஜா மாதிரி இருக்கே! நீஏன் கவலைப்படுறே!" தந்தை சொல்ல வேண்டியதை கந்தனும் தன் மகனுக்குச் சொன்னுன்!

"அப்பா! கொஞ்ச நாளைக்கு நான் இந்த ஊரைவிட்டே வெளியில் இருக்க விரும்புகிறேன்!" ராஜன் மிக்க கவலையோடு சொன்னுன!

"என்னப்பா ராஜன்! இந்த ஊர் உன்னை என்னசெய்தது!" கந்தன் சிரித்துக்கொண்டே கேட்டான்!

"அப்பா! உங்களுக்குத் தெரியாது! மனிதன் கெட்டொழிவதற்கு ஊரும் ஒருகாரணமாகும்! ராஜன் உலகத்தைப் பற்றி சரியாகப்புரிந்து கொண்டிருக்கிறுன் என்பதை இந்த பதில் எடுத்துக்காட்டியது!

"அப்படியானுல் உன்விருப்பம்போல்செய்! எங்கே போகப் போகிறுய்! கந்தன் பாதி மனதோடுதான் இதைச் சொன்னுன்!

"அப்பா! எனது நண்பர்கள் உயர்தரப்படிப்பிற்காக அமெரிக்கா செல்லுகிறுர்கள்! நானும் அவர்கள்கூட செல்லலாம் என்று நினைக்கிறேன்"

"அமெரிக்காவா? கந்தனுடைய மூச்சே நின்றுவிடும் போலிருந்தது!

"என்னப்பா! நான் போகக் கூடாதா? ராஜன் கவலையோடு கேட்டான்!

"போகலாம் ராஜன், போகலாம்! ஆனல் போகமுடியாது என்றுதான் சொல்லுகிறேன்,

கந்தன் உள்ளநிலையை விளக்கினான்!

"ஏன் போகமுடியாது அப்பா!" ராஜன் அப்பாவியைப் போல் கேட்டான்!

"நீ என்ன, சீமான் தர்மலிங்கம் பிள்ளையின் மகனா? அமெரிக்காவிற்கும், லண்டனுக்கும் பறந்துசெல்ல!" கந்தனுடைய கண்களில் நீர்த்துளிகள் நிறைந்திருந்தன!

"அந்த சீமான் தந்தானே, அந்த சொத்தைவிற்றுக்கொடுங்களேன் அப்பா! காங்கிரஸ் சர்க்கார் செய்த நன்மைகளால் கிடைத்தசொத்துதானே அப்பா! அதை கொடுங்களேனப்பா! ராஜன் தந்தையிடம் கெஞ்சினான்!

கந்தன் பதில்சொல்லவில்லை! நேராக ஒரு அறைக்குள் சென்று மரப்பெட்டி ஒன்றைத் திறந்தான்! அதில்கிடந்த காகிதக் கட்டுகளை எடுத்தான்! "இந்தா இதை வைத்துக் கொண்டு அமெரிக்காவிற்குச் சென்றுவா என்று அந்த காகிதக் கட்டை அவனிடம் கொடுத்தான்!

"என்னப்பா இது!" ராஜன் திகைப்போடு கேட்டான்

"சீமான் தர்மலிங்கம் பிள்ளை தந்த சொத்து" கந்தன் பதட்டத்தோடு சொன்னான்!

"அதை ஏனப்பா என்னிடம் கொடுக்கிறீர்கள்! ராஜன் வெகுளித்தனமாகவே கேட்டான்!

"படித்துப்பார் ராஜன், படித்துப்பார்! பாரி வள்ளல் வழங்கிய பரிசுகளைப் படித்துப் பார்!" கந்தனுடைய உள்ளமும் எரிமலையானது!

ராஜன் படித்தான், பலமுறை படித்தான்! "அயோக்கிய சிகாமணிகளே! நாடகமா ஆடுகிறீர்கள், நாடகம்! ஊரை ஏமாற்றித் திரிபவனுக்குப் பெயர் வள்ளல் பட்டமா? துரோகிகளே! உங்களுக்கேன் உத்தமன் காந்தி வைத்திருந்த குல்லா, உங்களுக்கேன் உத்தமன் காந்தி கட்டிய கதராடை! நிலச் சீர்திருத்தமாம், நிலச் சீர்திருத்தம்! காங்கிரசாம், காங்கிரஸ்!" என்று அடித்துக் கொண்டே படுக்கையில் போய் படுத்தான்!

"உதயசூரியன் அவன் கண் முன்னே தோன்றி—"டாக்டர் சார், தர்மலிங்கம் பிள்ளையின் சொத்து எப்படி இருக்கிறது" என்று பரிகாசம் செய்ய ஆரம்பித்தான்!

ராஜன் கண்களை இறுக மூடிக் கொண்டான்! அப்போதும் உதயசூரியன் அவன் கண்களை திறந்து அவன் முன்னே சிரித்த முகத்துடன் தோன்ற ஆரம்பித்தான்!

"போய்விடு! உதய சூரியா! நீ போய் விடு! என் மானத்தை வாங்காதே" என்று ராஜனுடைய வாய் பிதற்றிக் கொண்டிருந்தது!

(தொடரும்)

(தலையங்கம் தொடர்ச்சி)

அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே இந்த நாட்டிலுள்ள எல்லா பெரும் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளுங்கள்! இந்த நாட்டின் விடுதலையைப்பற்றி ஒரு முடிவுக்கு வாருங்கள்! அறிஞர் அண்ணா அவர்களிடத்தில்தான் நீங்கள் எதையும் சிக்கலின்றி. நல்லுறவோடு தீர்த்துக் கொள்ளமுடியும்! இன்னும் ஐந்தாண்டு காலம் உங்களுக்குக் கெடு இருக்கிறது! அதற்குள் வடவர்களுக்கு ஓலை அனுப்பியோ, தூது சென்றோ திராவிடத்தின் விடுதலைக்கு ஒரு முடிவைத் தெரிந்து வாருங்கள்!

அண்ணாவுக்குபின்னால் வருபவர் எப்படியோ, ஏதோ அதை நாங்களும் அறியமாட்டோம், நீங்களும் அறியமாட்டீர்கள்!

கனம் சுப்பிரமணியம் சின்னவர்—சின்னவர் என்றால் வயதில் சொல்லுகிறோம்! அவர் அனுபவமற்றவர், அரசியல் தரும் பலாபலன்களை அவ்வளவாக அறியாதவர்! கனம் காமராசர் காந்தியார் காலத்து அரசியல்வாதி, அடிபட்டவர், உதைபட்டவர், ஒரு விடுதலை இயக்கம் எதைச் சாதிக்கும் என்ற உண்மையை அறிந்தவர், எனவே காமராஜராவது இதற்கோர் முடிவைக் காண்பார் என்று எண்ணுகிறோம்.

திருவாளர் சம்பத் அவர்களை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது மிக்க பொருத்தமானதாகும்! கண்டிப்பும், கடமை உணர்ச்சியும் கொண்ட அவருக்கு ஏற்ற பதவியை அளித்திருப்பதைக் கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு உற்றதுணையாக நின்று பணிபுரிய நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், சிற்றரசு, நடராசன் முதலிய ஆற்றல்மிகு செயல் வீரர்கள் ஐவரையும் துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்! இந்த செயல்வீரர்களை நாமும் பாராட்டுகிறோம்!

கலைஞர் கருணாநிதி பொருளாளராக வந்திருக்கிறார்! பொருளைப்பற்றி இனி நாம் ஏதும் கவலைகொள்ளத் தேவை இல்லை!

கதை எழுதி பணம் சேர்த்துத்தருவார்! நாடகமாடி பொருள் சேர்த்துத்தருவார்! சினிமா படமெடுத்து பொருள் சேர்த்துத்தருவார், உண்டியல் ஏந்தியும் பொருள் சேர்த்துத்தருவார்! அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல் பொருள் சேர்ப்பாளர் ஒருவரை, நாம் பொருள் காப்பாளராகப் பெற்றிருக்கிறோம்! இனி தேர்தலின் வெற்றியைப்பற்றி நாம் கொஞ்சமும் அச்சப்படத் தேவையில்லை!

இந்த நேரத்தில் நமது முன்னால் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் செய்த பணிகளை நாம் கொஞ்சம் நினைத்துப் பார்க்கவேண்டும்! அவரால் நாம் பெரும்பயனை அடைந்திருக்கிறோம்! அவர் காலத்தில் நமது இயக்கம் நல்ல வலிவையும், பொலிவையும் பெற்று பல நல்ல செயல்களைச் செய்திருக்கிறது! அவருக்கு இந்த நேரத்தில் நன்றி செலுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்!

அறிஞர் அண்ணா அவர்களை பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்து பெருமதிப்பிற்கு பாத்திரமாகியுள்ள நமது பொதுக்குழு மிக்க கடமையுணர்ச்சியோடும் பணிபுரியவேண்டும்!

பொதுக்குழு உறுப்பினர் பதவிமிக்க பொறுப்பு வாய்ந்த பதவியாகும்! மிக்க சிறப்புவாய்ந்த பதவியாகும்! அவர்களிடத்தில் மிக்க கட்டுப்பாடு இருக்கவேண்டும், கடமையுணர்ச்சி இருக்கவேண்டும், கண்ணியமிருக்க வேண்டும்!

எந்த காலத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், என்ன நேர்ந்தாலும், எது நடந்தாலும் இயக்கத்திற்கு மாசு ஏற்படும் பணியில், ஊறு தேடும் வேலையில் இறங்கக் கூடாது!

"கட்டுப்பாடு தான் உங்களுக்கு மூச்சாக இருக்க வேண்டும், கண்ணியம் தான் உங்களுக்குப் பேச்சாக இருக்க வேண்டும்! கடமையாற்றுவதுதான் உங்களுடைய செயலாக இருக்கவேண்டும்! இதைத்தவிர உங்களுடைய எண்ணத்தில் எதுவும் உருவாகக் கூடாது! எந்த பேத உணர்ச்சியும் உண்டாகக்கூடாது" என்று கூறி இந்த சிறப்புவாய்ந்த பொதுக்குழுவில் அங்கம் வகிக்கும் பாக்கியத்தைப்பெற்ற பொதுக்குழு உறுப்பினர்களையும் பாராட்டுகிறோம்!

"பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் இடும் ஆணையை உயிராகமதித்து, உயிர்தியாகம் செய்யவும் நாங்கள் சித்தமாக இருக்கிறோம் என்று உறுதிகூறி, அறிஞர் அண்ணா அவர்களை கட்டளையிடும்படி கேட்டு, அவரையும் பாராட்டி மகிழ்கிறோம்!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் ஆற்றல் கழகத்தின் வளர்ச்சிக்காகவே பயன்படும் ஆற்றலாகவே இருக்கும்! இப்படி ஒவ்வொருவருடைய ஆற்றலும், திறமையும் நம்முடைய இலட்சியத்திற்கே பயன்படுவதாகும்!

நாம் மேற்கொண்டுள்ள இலட்சியப்பயணத்தைத் தடுக்க—நம்மை வெட்டலாம், குத்தலாம் கால்களையும், கரங்களை இழக்கச் செய்யலாம்—அன்றி நம்மைப் பிணமாகவும் ஆக்கலாம்! ஆனால் எதற்கும் அஞ்சாத நெஞ்சுரம் படைத்தவர்கள் நாம் என்பதை நாடு அறியும்!

தாய்த் திருநாட்டின் அவல நிலையைப் போக்க இந்த நாள் பயன்பட வேண்டும்! இதற்காக ஒரு சூளுரையை இந்த நேரத்தில் நாம் எடுக்க வேண்டும். அதற்கான பணியில் நாமெல்லாம் ஈடுபட்டு செயலாற்றவேண்டும்!

நான் இந்நாள் செயலாளர்; நாவலர் முன்னாள் செயலாளர்! நீங்களோ எந்நாளும் செயலாளர்கள்! நீங்கள் செயல்பட்டால்தான் எல்லா செயல்களும் இயங்கும்!

இதை மனதில் எண்ணி வீடு திரும்புங்கள்—உங்களில் யார் செயலாளர் என்பதை—செய்கின்ற விடுதலைப் பணியின் மூலம் காட்டுங்கள், என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்!

எங்களில் யாரும் வேறு வேறானவர்கள் அல்ல; தனித்தனியானவர்களும் அல்ல

ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள், ஒரே இலையில் சாப்பிடுபவர்கள் !

என்னுடைய எழுச்சி சம்பத்திடம் இருக்கிறது, என்னுடைய தமிழ் நாவலரிடம் இருக்கிறது, என்னுடைய அடக்க உணர்ச்சி மதியழகனிடம் இருக்கிறது! என்னுடைய கனிவு தம்பி கருணாநிதியிடம் இருக்கிறது !

அண்ணா பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கும், இவருக்கும் ஆகாதாமே" என்று நினைத்தால் நிச்சயமாக ஏமாந்து போவீர்கள்! எங்கள் நெரிசலில் அகப்பட்டுக்கொண்டு நொறுங்கிப் போய் விடுவீர்கள்! இதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்!

எங்களில் யாரும் வேறு வேறானவர்கள் அல்ல! எங்களில் யாரும் தனித்தனியானவர்கள் அல்ல!

என்னுடைய எழுச்சி, என் தம்பி சம்பத்திடம் இருக்கிறது!

என்னுடைய தமிழ், என் தம்பிநெடுஞ்செழியனிடம் இருக்கிறது!

என்னுடைய தமிழார்வம் என் தம்பி அன்பழகனிடம் இருக்கிறது !

என்னுடைய அடக்க உணர்ச்சி என் தம்பி மதியழகனிடம் இருக்கிறது !

என்னுடைய கேலியும், கிண்டலும் சிற்றரசுவிடம் இருக்கிறது !

என் தம்பி கருணாநிதியிடம் ஒரு குழலைக் கொடுத்துமோகன ராகத்தை ஊதச் சொன்னால் தேவையானது கிடைக்கும்! அவர் ஊதும் மோகன ராகம் சிலருக்கு முகாரியாகவும் தோன்றும்.

என்னுடைய அருமைத் தம்பி நெடுஞ்செழியனைப்பேசச் சொல்லுங்கள்! சாலையிலே, சோலையிலே, மயிலும், குயிலும், மானும்,மாடப் புறாவும்,தென்றலும், அருவியும் அவர் முன்னே வந்துநிற்கும்!

என்னிடம் எந்தத்தம்பிமார்களின்லை! என்தம்பிமார்களிடத்தில் எந்த ஆற்றல்தான் இல்லை!

அறிவுள்ளவன் இதைஅறிந்து கொள்வான்! அதுகுறைவானவன் இதைப்பற்றி சிந்திப்பான்! அதுவும் அற்றவன் அப்படித் தான் பேசித்திரிவான்.

அழைப்பு அனுப்பினால் உயிரையும்விட சித்தமாக இருக்கிறோம் என்று இங்கு எனது தம்பிமார்கள் பேசியதைக் கேட்டேன்! அதில் என்ன எனக்குச் சந்தேகம்!

> **அண்ணா வாழ்க !**
>
> **சென்னை மாநகரின் பாராட்டு !**
>
> ★★★
>
> என் இதயத்தின் ஒளியாம் அறிஞர் அண்ணா அவர்களே! தொழர்களே!
>
> சொந்த அண்ணனை பாராட்டும் ஆற்றலைப் பெற்றவன் அல்ல—நான் !
>
> சென்னை நகரத்தில் வாழும் 25 இலட்சம் மக்களின் சார்பில் என் பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!
>
> மேயர் எம். எஸ். அப்துல் காதர்

சிதம்பரம், அண்ணாமலை நகரில், எனது அருமைத் தம்பி மதியழகன்மாணவராகபடித்துக் கொண்டிருந்த நேரத்தில், காலிகள் அவரை கொட்டடியில் பூட்டிவைத்த நிகழ்சியையாரும் மறந்துவிட மாட்டார்கள்! அங்கேபல இன்னல்களுக்கு ஆளாகி தியாகத் தழும்புகளைப் பெற்றவர்தான் என் தம்பி மதியழகன்!

புதுவை வீதியிலே துரத்தித் துரத்தி அடிக்கப்பட்டு பிணமாகி விட்டார் என்ற காரணத்தால் அவரை விட்டு விட்டுச் சென்றார்கள். இப்படி இரத்த வெள்ளத்தில் மிதந்தவர் தான் என் தம்பி கருணாநிதி.

காலிகளால், ஏவிவிடப்பட்ட கூலிகளால் மதுரை மாநாட்டுப் பந்தலுக்கு நெருப்பை வைத்து கொளுத்திய நேரத்தில்-எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்த நேரத்தில்-மிச்சமுள்ள கழிகளை உருவி பாதுகாப்பு அளித்தவர்கள்தான் என் தம்பி சம்பத்தும், நெடுஞ்செழியனும்!

என் தம்பி நடராஜன் காங்கிரஸ் கட்சியில் இருந்து பார்த்து விட்டு—என்னையும் கொஞ்சம் திட்டி விட்டு வெளியேறி நம்மோடு பெரும் பணிபுரிபவர் தான்.

இபபடி ஒவ்வொரு வராகப் பேசிக் கொண்டே போகலாம் அது தித்திப்பாகத்தானிருக்கும்; மகிழ்ச்சி யாகத்தானிருக்கும்.

இப்படியே பேசிக்கொண்டு போனால்—கேட்க இன்பமாகத் தான் இருக்கும். கேட்டு விட்டு போகும்போது நனைந்துதான் செல்ல வேண்டும். இந்த பாரட்டுக் கூட்டம் நீராட்டுக் கூட்டமாகத்தான் முடியும்.

இங்கே ஒருவருக்கு ஒருவர் பாரட்டுரை வழங்கி, பெருமை பேசிக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இல்லை! நாமெல்லாம் திராவிடக் கோட்டத்தில் வீற்றிருப்பவர்கள். இங்கே ஒவ்வொருவரும் ஒரே இலையில் உட்கார்ந்து சாப்பிடக் கூடியவர்கள்.

நாமெல்லாம் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களைப் போன்ற பாச உணர்ச்சியைப் பெற்றவர்கள். நமெல்லாம் ஒரே தாய் வயிற்றில் பிறக்காத காரணம்—இங்கு வீற்றிருப் பவர்களையெல்லாம் பெறுவதற்கு ஒரு தாயின் வயிறு வளர்ச்சி பெறாத இடம் பெறாத காரணத்தால் தான் என்பதை அறிய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள இந்த நிலையை எங்கள் மூச்சுள்ள வரையில் எவராலும் அழிக்க முடியாது.

ரோம் நாட்டில் பிலாங்கஸ் என்ற ஒரு பட்டாளம் உண்டு! இந்த பக்கமும் ஆறு, அந்தபக்கமும் ஆறு, நாலாபக்கங்களிலும் ஆறுகள் உண்டு! டாங்கிப் படைகளைப் போல் மூழ்கிக் கடந்து செல்ல வேண்டும்.

நாம் அனைவரும் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள்! ரோம் நாட்டிலுள்ள பிலாங்கஸ்படையின் ஆற்றலைப் பெற்றவர்கள்! நெருப்பாற்றில் மூழ்க வேண்டுமானாலும், ரத்தக் குளத்தில் நீந்த வேண்டுமானாலும் நாம் ஒருநாளும் தயங்க மாட்டோம்!

நாம் சொத்தைப் பொருளாக இருந்திருந்தால் ஒரு தேர்தலிலேயே அழிந்திருப்போம்! நாம் எத்தனை தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றாலும் அதைப் பற்றித் துளியும் கவலைப்படுவதில்லை! நம்முடைய நாவலர் நடையிலே கூறவேண்டுமானால் நாம் கண்ணீராலும், செந்நீராலும் வளர்ந்திருக்கிறோம்!

இதன்உள்ளே ஊடுருவலாம் என்று எண்ணினால், போர் முறையைப் புரியாதவர்கள் என்று பொருள்!

சம்பத் அவைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்!

(11ம் பக்கம் பார்க்க)

கதர்சட்டை அணிந்தவனெல்லாம் காங்கிரஸ்காரனல்ல !

கொலைகாரனும், கொள்ளையடிப்பவனும் காங்கிரசில் புகுந்துள்ளான் !

மக்களின் துயரம் தினம் தினம் பெருகுகிறது; அதனாலேயே கழகம் வளருகிறது !

★

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்திருக்கிறோம், பல பிணங்களைப் பார்த்திருக்கிறோம். பல கல்லறைகளைக் கண்டிருக்கிறோம்; அப்படிக் கண்டதால் நாம் அழியவில்லை. மாறாக வளர்ந்திருக்கிறோம்.

நம்முடைய கழகமும், நாமும் பல சோதனைக்கப்பால் வளர்ந்து வந்திருக்கிறோம்.

காங்கிரசாரும், ஆட்சியாளரும் நம்மை அழிக்க எந்தெந்த வகைகளையோ செய்து பார்த்து வந்திருக்கிறார்கள். அத்தனை சோதனையையும் இந்தப் பதினேறு ஆண்டுகளில் தாண்டி வந்திருக்கிறோம்.

நம்மை அழிப்பதற்காகக் காங்கிரஸ்காரர்கள் நம்மைப் போல் பேசிப் பார்த்தார்கள், எழுதிப் பார்த்தார்கள். நடித்தார்கள், என்றாலும் நம்மை அழிக்க முடியவில்லை. கடைசியில் உதைக்கவும், கொல்லவும் முனைந்திருக்கிறார்கள்.

நம்மை சினிமாக் கட்சிக்காரர்கள் என்று கூறி மக்களிடம் செல்வாக்கைக் குறைத்துவிட எண்ணினார்கள்.

இதை மக்கள் நம்பவில்லை இன்று யார் யாரையோ வைத்து பலாத்காரத்தால் அழித்துவிட திட்டம், போட்டு விட்டார்கள்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் 'கூறினார்கள் "காகிரசைப் பற்றி தெரியதவர்கள்—காந்தியாரைப்பற்றிப் புரியாதவர்கள் அவரது கொள்கைகளைப் படிக்காதவர்கள் எல்லாம் கதர் சட்டையை மாட்டிக் கொண்டு காங்கிரஸ் காரர்களாக இருக்கிறார்கள்" என்று கதர் சட்டை போட்டவன்எல்லாம் காங்கிரஸ்காரனல்ல, ஒழுக்கமற்றவனும், இழிசெயல் புரிபவனும் நாட்டில் வாழத் தகுதியற்றவனும் இன்று கதர்ச் சட்டையணிந்து தன்னை மனிதனாகக் காட்டிவருகிறான்.

நீங்கள் இந்த சென்னையில் இந்த புரட்டாசி மாதங்களில் பார்க்கலாம். பலர் கையில் செம்புகளை ஏந்தியும், நெற்றியில் நாமம் போட்டும், இரண்டு கைகளிலும், மார்பிலும் நாமத்தைப் போட்டு, "வெங்கட்ரமணா கோவிந்தா" என்று கூவிக்கொண்டு வீடு வீடாக வருகிறார்கள். அவர்கள் பக்தியாலா வருகிறார்கள்? அவர்களெல்லாம் வைஷ்ணவ பக்தர்கள் என்று எண்ணிவிட முடியுமா? அவர்கள் வீடு வீடாகப் பிச்சைக்கு வருகிறார்கள். அது போன்றுதான் இன்று கதர் போட்டு, காங்கிரஸ் என்று கூறிக்கொண்டு வயிறு பிழைக்க முன் வந்திருக்கிறார்கள் — காலிகள், ரௌடிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் கதரைப் போட்டுக்கொண்டு கையில் கத்தியைத் தூக்கிக்கொண்டார்கள்.

இதனால் முன்னேற்றக்கழகம் அழிந்துவிடுமா? அதன் பழைய வரலாற்றையும், இன்றைய வரலாற்றையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

முன்னேற்றக் கழகம் ஆரம்ப காலத்தில் பல ஆயிரக் கணக்கானவர்களை அங்கத்தினராகக் கொண்டிருந்தது! இன்று இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டிருக்கிறது. முன்பு நூற்றுக் கணக்கான கிளைக் கழகங்களைக் கொண்டிருந்தது! இன்று 4500க்கு மேற்பட்ட கிளையைக் கொண்டிருக்கிறது! முன்பு ஓரிரு இடங்களில் கொடிகள் பறந்து கொண்டிருந்தது! இன்று நாடு, நகரம், பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர் ஆகிய இடங்களில் நம் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. நமது கொள்கைகள், இலட்சியங்கள், கொள்கைகள் புகாத, பறவாத இடங்களே இல்லை!

சென்னை மாநகர மன்றத்தில் முன்பு மூன்று பேரே அங்கம் வகித்தார்கள். இன்று நாற்பத்தைந்து பேர்கள் அங்கம் வகிப்பதுடன், ஆட்சி பீடத்தையும் கைப்பற்றி இருக்கிறோம்.

சென்னை சட்ட மன்றத்தில் ஓரிருவர் இருந்தோம். இன்று 15 பேர்கள் இருக்கிறோம். அது போன்றுதான் பாராளுமன்றத்தில் நமது குரல் கொடுக்க ஒருவரும் இல்லாதிருந்தது இன்று அங்கு நமது கொள்கையை முழக்க இருவர் சென்றிருக்கிறார்கள் இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது நமது வளர்ச்சியைக் காட்டவில்லை.

இப்படியெல்லாம் கூறுவது நமது பெருமையைக் கூறுவதற்காகவோ, ஆற்றலை எடுத்தியம்புவதற்காகவோ கூறவில்லை. இப்படியெல்லாம் நாம்வளர்ந்திருப்பது நமது மாற்றாருக்கு வயிற்றெரிச்சலையும், பொறாமையையும், பொச்சரிப்பையும் உண்டாக்கி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கும், அதனால் மதியிழந்து கத்தியைத் தூக்குகிறார்கள் என்பதை விளக்கவே இதைக் கூறுகிறேன்.

நாம் இப்படி வளர்வதற்குக் காரணம்என்ன? ஏன்வளர்ந்தோம், அதைத்தான் சிந்திக்க வேண்டும்

இந்தமாநிலத்தை ஆளுகின்ற எட்டு அமைச்சர்களின் கையாலாகாத் தன்மையாலும், திறமையற்ற செயலாலும், அதிகார மற்ற நிலையாலும், அவர்களால் இந்த நாட்டுமக்கள் எந்தவித நன்மையும் பெறமுடியதென்று

(அடுத்த பக்கம் பார்க்க)

அங்கே சர்ச்சில்; இங்கே அண்ணா !

போர்க் காலத்தில் சர்ச்சிலைக் கூப்பிட்டு தலைமைப் பதவியை அளித்தது போல்—நமது பொதுக் குழுவும், இந்த நெருக்கடிக் காலத்தில் நெருக்கடியைத் திர்க்கும் ஆற்றலைப் பெற்ற அறிஞர் அண்ணாவை அழைத்து இந்தப் பொதுச் செயலாளர் பதவியைத் தந்திருக்கிறது! நாம் அண்ணாவைப் பாராட்டுவதைவிட பொதுக்குழுவைத் தான் பாராட்ட வேண்டும்!

டி. கே. சீனிவாசன்

நாம் புலி வேட்டைக்குப் போகிறோம்; இடையில் வரும் எலியைப் பிடிக்க எண்ணக் கூடாது!

இன்பத் திராவிடம் பெறுவதே நமது இலட்சியம்!

அதற்காக எந்த இன்னலையும் ஏற்கத் தயாராவோம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் எண்ணியதாலும், அவர்கள் உணர்ந்ததாலுமே நாம் வளர்ந்தோம், வளர்கிறோம்அவர்கள் நல்லவர்களாக – நாணயமுள்ளவர்களாக இருந்தால் மக்களிடையே நிலவிவரும் அந்த எண்ணத்தைப் போக்கி மக்களின் நல்லாதரவையும், அன்பையும் பெறுவதற்கு முயற்சித்திருக்கவேண்டும், அதைவிடுத்து கத்தியையும், கம்பையும் எடுப்பதால் அவர்கள் வளர்ந்துவிடமுடியாது. இன்று அமைச்சர்களைக் கையாலாகாதவர்கள். எதையும் இவர்களால் சாதிக்க முடியாது என்று மக்கள் எண்ணிவிட்டார்கள். ஆகவே. இவர்கள் எதைச் செய்தாலும் நாம் பயப்படவேண்டியதில்லை,

திராவிடமுன்னேற்றக்கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு முதலமைச்சர் காமராசரும், மற்றொரு அமைச்சர் கக்கனும் போகின்ற இடங்களிலெல்லாம் மட்டரகமாகத் தாக்கி வருகிறார்கள். அவர்கள் நாம் கூறும் கொள்கையையோ, இலட்சியத்தையோ தவறானது என்று எங்கும் கூறவில்லை. அவ்வாறு அவர்கள் கூறுவதற்குத் திறமையும் கிடையாது.

ஆனால் தனிப்பட்ட முறையில் தாக்கிக் கழகத்தை அழித்து விடலாம் என எண்ணுகிறார்கள். அவர்கள் எப்படியும் எண்ணிக் கொள்ளட்டும்.

முதலமைச்சர் காமராசர் ஒரு கூட்டத்தில் பேசும்போது, “எங்களை ஒன்றும்செய்யவில்லை என்று கூறும் அண்ணாதுரை என்ன சாதித்திருக்கிறார்?” என்று கேட்டிருக்கிறார்! இதிலிருந்து அவருடைய அரசியல் அறிவு, தெளிவு எவ்வளவு என்பதைப் புரிந்துகொள்ளலாம்,

காமராசர் ஆட்சி பீடத்தில் அமைச்சராக அமர்ந்திருக்கிறார். அவரிடம் பலம், பணம், அதிகாரம், பாதுகாப்பு எல்லாமிருக்கிறது; எல்லாவற்றையும் தன்னகத்தே வைத்திருக்கும் காமராசர் மக்களுக்காக எதையும் சாதிக்க முடியவில்லை என்று குறை கூறும் அண்ணாவைப் பார்த்து–அதிகாரம், ஆட்சி, கஜானா, பணம் இவை இல்லாத அண்ணாவைப் பார்த்து “நீ என்ன சாதித்தாய்?” என்று கேட்கிறார். இது எதைக் காட்டுகிறதுஎன்றால் “கல்யாணமாகி பல வருடம் குடும்பம் நடத்துகிறவனைப் பார்த்து, கல்யாணமாகாத ஒருவன் கல்யாணமாகி இத்தனை வருடங்களாகியும் ஒன்றும் செய்யவில்லையே என்று கேட்டால் கல்யாணமானவன், கல்யாணமாகாதவனைப் பார்த்து, “நீ ஏன் ஒன்றும் செய்யவில்லை?” என்று கேட்பதுபோல் இருக்கிறது! இந்த மாதிரி விசித்திர மனிதர்கள்தான் நமக்கு அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

நமது நண்பர் சிட்டிபாபு அவர்கள் நானுவதி வழக்கைப் பற்றியும், ஆட்சியாளர்கள் அதுபற்றி நடந்து கொண்ட விதத்தைப் பற்றியும் விரிவாகக் கூறினார்!

நான் இந்த மாநிலத்தில் இதற்கு முன் நடந்த மூன்று வழக்குகளைப் பற்றியும், இந்த மாநில அரசு நடந்துகொண்ட போக்கைப் பற்றியும் உங்கள் முன் கூற ஆசைப்படுகிறேன்.

ஒன்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ சட்ட வழக்கு.

2வது தூத்துக்குடி கே.வி.கே. சாமியின் கொலை வழக்கில் முக்கிய எதிரியாக தங்கப்பழம் சேர்க்கப்பட்டு வழக்கு நடைபெற்றது நாம் அனைவரும் அறிந்ததே! இந்த வழக்கை விசாரித்த செஷன்ஸ் நீதிபதி தங்கப்பழம் குற்றவாளியல்ல என்று விடுதலை செய்தார்.

ஆனால் சென்னை சர்க்கார், செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பு சரியல்ல என்று உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தது. அப்பீலில் தங்கப்பழம் தண்டிக்கப்பட்டார். தங்கப்பழம் சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்து விடுதலை ஆனார்,

எந்தத் தங்கப்பழம் கொலையாளி, தண்டிக்கப்படவேண்டியவர் என்று இந்த காங்கிரஸ் சர்க்கார் வாதாடியதோ, அந்த தங்கப்பழத்தை மானம், வெட்கம், ரோஷம் இன்றி தனது கட்சியான காங்கிரசில் சேர்த்துக்கொண்டது, அவரை காங்கிரஸ் மேடைகளில் பிரச்சாரம் செய்ய வைக்கிறது!!

திரு. அழகிரிசாமி பப்ளிக் பிராசிக்யூட்டராக சர்க்காரால் நியமிக்கப்பட்டார்.

இதை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் காரித்துப்பி இருக்கிறார்கள். கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள், இந்த வேதனையைத் தாங்கமுடியாததால்தான் சட்ட மந்திரி சுப்பிரமணியம் மேல் நாட்டுக்குப் போய்விட்டார் போலும்.

மேலேகண்ட மூன்று வழக்குகளில் இந்த மாநில அரசினர் தோல்வி கண்டார்கள், இவர்கள் மிகவும் சட்டம் தெரிந்தவர்கள் போன்று நம்மை இழித்துப் பேசுகிறார்கள்

இந்த மாநில அமைச்சர்களுக்குதானாகச் செய்வதற்கு எந்தவித அதிகாரமும், மத்திய அரசினைத் தட்டிக்கேட்கின்ற தைரியமும் கிடையாது. அவர்கள் தைரியமெல்லாம் நம்மையும், நமது கழகத்தையும்தாக்குவதில்தான் இருந்து வருகிறது.

ஆவடியில் மின்சார உற்பத்தி தொழிற்சாலை நிறுவ வேண்டுமென இந்த மாநில அரசினர் கேட்டார்கள்) மத்திய அரசினர் முடியாதென்று கன்னத்தில் அறைவதுபோன்று கூறி விட்டார்கள். இதற்கு இவர்கள் என்ன செய்தார்கள்.

உதக மண்டலத்தில் கச்சா பிலிம் உற்பத்திசாலை ஏற்படுத்தப் போவதாக இந்த மாநில அமைச்சர்களும், மத்திய அமைச்சர்களும் ஜம்பம் அடித்துக் கொண்டார்கள். அதைப்பற்றி நமது அமைச்சர்கள் பல மேடைகளில் பேசி கொண்டு வந்தார்கள். முடிவில் என்ன நடந்தது. வட நாட்டிலுள்ள பீகாரில் ஏற்படுத்தி விட்டதாகச் செய்தி வந்து விட்டது. செய்திவந்தது மட்டுமல்ல, சென்னை அரசாங்கம் தனக்கு உதவவேண்டுமென்றும் கடிதம் எழுதி இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு பெண்ணை ஒரு வாலிபனுக்குக் காட்டி இந்தப் பெண்ணைத்தான் உனக்குக் கல்யாணம் செய்ய போகிறோம் என்று சதா சொல்லிக் கொண்டிருந்துவிட்டு, பின் வேறு ஒருவனுக்கு முடிவுசெய்துவிட்டு, முன்னால் சொல்லப்பட்டவனிடம் கல்யாணச் செலவிற்குப் பணம் கேட்பது போல் இருக்கிறது.

இதுபோன்றுதான் பலவிஷயங்கள் நடந்துவருகிறது சேலம் இரும்புத் தொழிற்சாலையும், தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்பும். இங்குள்ள அமைச்சர்களின் கையாலாகாததனத்தால் எல்லாம் வாயால் சொல்லப்படுவதும் பின் அவைகளெல்லாம் வடநாட்டில் ஏற்படுத்தப்படுவதுமாகிறது.

முன்னால் பேசிய அரங்கநாதன் நாங்களும் கத்தியைக் கையில் எடுத்தவர்கள், நாங்கள் அதில் ஈடுபட்டால் நீங்கள் தவிடு பொடியாகி விடுவீர்கள்” என்று கூறினார். அது நமக்குத் தேவையில்லாத காரியம். நாம் புலிவேட்டைக்குப் போகிறோம் புலியைத்தான் பிடிக்க வேண்டுமே ஒழிய இடையில் வரும் எலியைப் பிடிக்க முயலக் கூடாது. நாம் விடுதலை அடைந்த திராவிட நாட்டைப் பெற முயற்சித்து வருகிறோம். ஆகவே மத்தியில் வரும் தொல்லைகளுக்கு நம்மை ஆளாக்கக் கூடாது. அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யட்டும். அவர்கள் இப்போது செய்வது புதிதல்லவே ஆரம்பத்திலிருந்துதான் பலாத்கார வேலைகள் செய்து வருகிறார்கள்.

நாம் தாளமுத்து — நடராசன் பிணங்களைக் கண்டோம், உடையார் பாளையம் வேலாயுதம் பிணத்தைக் கண்டோம், மஜீத் பிணத்தைக் கண்டோம், கல்லக்குடி நடராசன் பிணத்தைக் கண்டோம் வண்ணைபாண்டியன் பிணத்தைக் கண்டோம். தென் பாண்டி மண்டல மாவீரன் தூத்துக்குடி சாமி பிணத்தைக் கண்டோம். இப்போது குடந்தை இராமலிங்கத்தின் பிணத்தைப் பார்த்தோம், கோவை ஆரேக்கியசாமி பிணத்தை பார்த்தோம். இதனால் நம் கழகமும்,நாமும் அழிந்தா விட்டோம். ஆகையால் நமது அண்ணா அவர்கள் நமக்குக் கற்பித்த புத்தியைத் திட்டு என்ற அறவழியைப் பின்பற்ற வேண்டுகிறேன். அவர்கள்

(12ம் பக்கம் பார்க்க)

நாவலர் முன்னாள் செயலாளர்; நான் இந்நாள் செயலாளர்!

நீங்களெல்லாம் எந்நாளும் செயலாளர்கள்!

திராவிடத் திருநாட்டை மீட்க செயல் புரியுங்கள்!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டெல்லி பாராளு மன்றத்தில் வீற்றிருக்கும் சம்பத்தை நான் காணவில்லை!

நான் எந்த சம்பத்தைக் காண்கிறேன்! பசிஎடுத்தால் ஓட்டலுக்குப் போகாமல்-நான் படுத்திருக்கும் கட்டிலுக்கு அடியிலே பயந்துபதுங்கிக்கொண்டிருந்து –சித்தப்பா போய்விட்டாரா" என்று பார்த்துவிட்டுப்போகும் சம்பத்தைக் காண்கிறேன்!

சம்பத் என் வீட்டில் பிறக்கவில்லை! வேறு எங்கேயோ பிறந்து விட்டார்—நல்ல இடம் தான்—யாரோ ஒருவர் வீட்டில் பிறந்து விட்டதாக நான் நினைக்கவில்லை! என் வீட்டில் என் குடும்பத்தில் பிறந்திருப்பதாகவே நினைக்கிறேன்!

தம்பி நெடுஞ்செழியன்ஏதோ சுமையைத் தாங்க முடியாமல் என்னிடம் பொதுச் செயலாளர் பதவியை ஒப்புவித்து விட்டதாகக் கூறினார்! தம்பி! நீ அவ்வளவு சுலபத்தில் எங்களை ஏமாற்ற முடியுமென்று நினைக்காதே.

உன்னுடைய பொறுப்புணர்ச்சியை நான் அறிவேன் –நாடும் பாராட்டுகிறது! நீ செய்த பெரும் பணியை நான் அறிவேன்—நாட்டு மக்களும் அறிவார்கள்.

நான் உன்னிடம் ஒப்புவித்த பொறுப்பை திருப்பித்தருகின்ற நேரத்தில்—இரண்டு பாராளுமன்ற உறுப்பினரையும், 15 சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒரு மேயரையும்—ஏறக்குறைய ஒரு இலட்சம் செல்வத்தையும்-எல்லாமேற்றிருக்கும் மேலாக மூன்று இலட்சம் இதயங்களையும் தந்திருக்கிறாய்.

உன்னை ஓய்வு பெறவைப்பதற்காக இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளவில்லை! நீ, உண்மையிலேயே காதலியோடு கொஞ்சி மகிழும் பருவத்திலேயே உன்னை ஓய்வு பெறவிடவில்லை. குழந்தைகள் வந்து குறுக்கிடுகின்ற இந்த நேரத்திலா உன்னை ஓய்வு பெறவைப்போம்.

நான் எல்லா நேரங்களிலும் அவர் கூடதான் இருப்பேன். அப்போது நான் பக்கத்திலே இருந்தேன். இப்போது அவரும் பக்கத்தில் தான் இருப்பார். எல்லா தோழர்களும் அவர் பக்கத்தில் தான இருப்பார்கள். அதையெல்லாம் எண்ணிதான் "பரவாயில்லை" என்று இந்தப் பொறுப்பை எற்றுக் கொண்டிருக்கிறேன்.

உண்மையிலேயே தம்பி நெடுஞ்செழியன் கூறியது போல் இது அவ்வளவு பெரிய பாரமும் அல்ல! ஒரு மூட்டையைத் தூக்கி தலையில் வைக்கும் போது "ஏப்பா இவ்வளவு பெரிய பாரமா?" என்று மலைப்பதும் சரியல்ல! இது அப்படி ஒன்றும் பெரிய பளுவுள்ள பாரமும் அல்ல!

நம்மிடத்திலுள்ள கட்டுக்கோப்பு உணர்ச்சியைப் பற்றி சம்பத் எடுத்துச் சொன்னதை நான் கேட்டேன்! நாமெல்லோரும் ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள்! அந்த அமைப்பில் பாச உணர்ச்சியோடும் இருப்பவர்கள்! இங்கே யார் யாருக்கு எந்தெந்த இடம் என்பதல்ல முக்கியம்- யார், யார் எந்தெந்த நேரத்தில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது என்பதும் முக்கியமல்ல! இங்கே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்பு உண்டு!

ஏறத்தாழ 4000 கிளைக்கழகங்களும், மூன்று இலட்சம உறுப்பினர்களும் நம்மிடத்தில் உண்டு! அத்தனை பேருக்கும் இந்த பொறுப்பு உண்டு! இத்தனை ஒரு பெரும் நிதியை, இத்தனை ஒரு பெரும் செல்வத்தை நமக்கு நாவலர் திரட்டித் தந்திருக்கிறார்!

அதுதான் நல்ல தம்பி செய்யவேண்டிய நற்பணிக்கு அடையாளமாகும்!

தம்பிக்கு அண்ணன் திருமணம் செய்துவைத்தால்—திருமணம் செய்துகொண்ட தம்பி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அந்த குழந்தையை அண்ணனிடம் தூக்கிக் கொடுத்து விளையாடும்படி சொல்வதுதான் — தம்பிக்கு திருமணம் செய்துவைத்த மகிழ்ச்சியை அடைவான்! நமது நாவலர் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, ஆறு வயது வரை வளர்த்து என்னிடம் கொடுத்திருக்கிறார்!

தம்பி கருணாநிதியும், சம்பத்தும், தேர்தல் பணியைப் பற்றியும், அதிலே ஈடுபாடு கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்!

நம்முடைய பணி தேர்தலில் ஈடுபாடு கொள்வது மட்டுமல்ல! நம்முடைய மூலப்பணி, முன் பணி, ஒரே பணி விடுதலைப் பணியே யாகும்! அந்தப் பணியில் ஈடுபாடு கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்! நம்முடைய தாய்த் திருநாட்டை மீட்டுத் தரும்படியும் வேண்டுகிறேன்.

நம்முடைய ஆற்றலும், வலிவும், நம்முடைய பரம்பரையின் வாழ்வுக்கே பயன்பட வேண்டும்!

கடலோரத்திலே காற்று வீசுவது, கடல் அலைகளுக்காக அல்ல, கடற்கரை மணற் பரப்பிற்காகவும் அல்ல—ஓரத்திலே வீற்றிருப்பவர்களுக்காகத் தான்!

கருணாநிதியின் ஆற்றலைப் பற்றி இங்கு பலர் பேசினார்கள்! அந்த ஆற்றல் அவருக்காக இருப்பது அல்ல! ஏற்றிவைக்கப்பட்ட விளக்கு—அது அகல் விளக்கானாலும் இருட்டைப் போக்கும்! ஆனால் அந்த விளக்கின் அடியில் இருட்டாகத்தான் இருக்கும்! எனவே கருணாநிதி

(12ம் பக்கம் பார்க்க)



Registered as a Newspaper in CEYLON

வெளிநாடு 20 சதம்

Regd. No. M. 7074 MALAIMANI விலை 16 காசு Phone 83285

ஆளத் தெரிந்தால் மட்டும் போதாது; ஆளத் தகுதியும் வேண்டும்!

காங்கிரஸ்காரர்கள் தங்களின் கடைசி அத்தியாயத்தை எழுதிடும் பரிதாப நிலைக்கு வந்துவிட்டார்கள்!

நாம் மற்றவர்களின் பொருமை உணர்ச்சியால்தான் பிறந்தோம்; வளர்ந்தோம்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே போல்தான் நமது பொதுச்செயலாளர் தேர்தலைப் பற்றியும் பேசிவந்தார்கள்—கனம் காமராஜர் உள்பட! அரசியலிலே, சிலபல நேரங்களில் தரங் கெட்ட நிலை ஏற்படுவதுண்டு! ஆனால் மிக்க கீழ்த் தரமான, மிக்கக் கேவலமான பணியில் இறங்குவது மனிதர்களாக பிறந்து விட்டவர் களுக்குத் தகாது!

காமராஜர்—"திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியலை இன்னும் நான்கு நாட்கள் கழித்துப் பார்க்க வேண்டும்" என்று கூறினாராம்! காமராஜர் எதை நினைத்துக் கொண்டு இப்படிப் பேசினார் என்பதை அறியபெரும் யூகம் படைத்தவர்கள் ஒன்றும் தேவையில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டி உண்டாகும் பிளவு ஏற்படும், அதனால் கழகம் அழிந்துவிடும், கவிழ்ந்துவிடும் ஒழிந்துவிடும் என்ற நப்பாசைக் காரணமாகத்தான் இப்படி பேசி இருக்கிறார்! காமராஜர்முகத்தில் இன்று கரி பூசப்பட்டு விட்டது!

அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக வந்தது குறித்து பலர் பலவிதமான சிந்தனைசக்திகளில், தான் மூளை பலம் முழுவதையும் செலவழித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்! அப்போதும் அவர்ளுக்குப் புரியவில்லை!

ஒரு பத்திரிகை நிருபர் என்னை வந்து சந்தித்து-"நெருக்கடி நிலையை சமாளிக்கத்தான் அண்ணா பொதுச்செயலாளர் பதவியை ஏற்றுக் கொண்டதாகச் செல்லப்படுகிறதே இது உண்மையா" என்று கேட்டார்! இது எவ்வளவு விஷமத்தனமான செய்தி என்பதை அவருக்கு விளக்கினேன்! திராவிட முன்னேற்றக் கழகம் தன்னையும், காட்டுப் பிரச்சினையையும் பொறுத்துதான் எந்த முடிவையும் செய்யும்! அண்ணா தான் இந்த நேரத்தில் தேவை என்று விரும்பினோம்! எனவே அண்ணாவை நாம் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தோம்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக வந்தது குறித்து வெளியில் என்னென்னவோ கதை கதைக் கிறார்கள். அவர்கள் கதைப் பதைப்பற்றி நாம் கொஞ்சமும் கவலைப்படவில்லை! ஆனால் அவர்கள் எவ்வளவு சின்னத்தனமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை அறியவேண்டும்!

இன்றைய தினமே காங்கிரஸ் காரர்கள் கெடுபிடி தேர்தல் பிரச்சாரத்தில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்படும், அந்தப் பிளவைப் பயன்படுத்திக் கொண்டு நீண்ட நெடுங்காலத்திற்கு தங்கள் அரசியல் வாழ்க்கையை ஓட்டிக் கொள்ளலாம் என்று கருதினார்கள் போலும்!

உங்களிடத்தில் சிண்டு பிடிச் சண்டை அன்றாட வாழ்க்கையாக இருந்து வருகிறது! அதை பற்றி கொஞ்சமும் வெட்கப் படாமல் அலைந்து வருகிறீர்கள்!

உங்களுடைய சொந்த கட்சி வாழ்க்கையில் மட்டுமல்ல பொது நிர்வாகத்திலும் அடிக்கும் முடை நாற்றம் சகிக்க முடியவில்லை!

முந்திராவின் ஊழல் நாடறிந்த விஷயமாகும்.

இத்தகைய கேவலமான நிலையில் வாழும் நீதான் எங்களைப் பற்றித் தவருக எண்ணிப் பேசுகிருய்! உன்னுடைய இந்திர ஜால வார்த்தைகளை நம்பி இனியும் மக்கள் மோசம் போகமாட்டார்கள்!

நீ அச்சடித்து வெளியில் விடுகின்ற சொத்தை காகிதநோட்டு ஆயுதங்களால் இனி எதையும் சாதிக்க முடியாது!

உன்னுடைய நாணயத்தின் மதிப்பை மக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்! உன்னுடைய நோட்டின் மதிப்பு கிடுகிடுவென்று இறங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது! சர்க்கார் அடிக்கும் நோட்டைத் தவிர, தனியார் துறையினரால் அச்சடிக்கப்பட்டுவரும் நோட்டுகள் வேறு நாணயத்தின் மதிப்பை சீர் குலைக்கிறது என்று கூறுகிறார்கள்!

இன்றைய தினம் விலாசம் தெரியாது பார்மோசா தீவில் பதுங்கிக் கொண்டிருக்கும் சியாங்கே-ஷேகின் அந்திய காலத்தில் அங்கே ஒரு கோழி முட்டையின் விலை 25 ரூபாயாக இருந்ததாம்! அந்தக் கட்டம் இங்கும் ஏற்படக் கூடாது என்றுதான் ஆசைப்படுகிறேன்.

இன்றையத் தினம் காங்கிரஸ் காரர்கள் தங்களின் இறுதி காலத்தை கணித்துக் கொள்ளுவதற்கு, 'கடிகாரத்தையும், காலண்டரையும் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த லட்சணத்தில் வேறு நாங்கள் தான் நாட்டை ஆளத் தெரிந்தவர்கள் என்று சொல்லித் திரிந்து கொண்டு வருகிறார்கள்! நாட்டை ஆளத் தெரிந்தவர்கள் நாட்டை ஆண்டால் மட்டும் போதாது! ஆளத் தகுதி பெற்றவர்களே நாட்டை ஆள வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் நல்லதோர் இலட்சியத்தைக் கொண்டு எல்லோருடைய உள்ளங்களிலும் அது நல்லதோர் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வருகிறது! திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் தான் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் புதுக் கணக்கை எழுதிக் கொண்டிருக்கிறது! ஆட்சியாளர்களோ தங்களின் கடைசி அத்தியாயத்தை தீட்டிக் கொண்டிருக்கும் பரிதா நிலையைக் கண்டு மிகவும் வருந்துகிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கூறி வருகிறார்களாம்! எங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை நாங்களே அறிவோம்! எங்கள் தகுதியை அடிகோல் எடுத்துக் கொண்டுவந்து காலிலிருந்து, தலைவரை —அடியிலிருந்து நுனிவரையில் அளந்து பார்க்கத் தேவையில்லை! இங்கே அளவில் யார் உயரமாக இருக்கிறார்கள் என்று சொல்லுவதும் அறிவுடைமையாகாது!

இன்றைய தினம் பொதுச் செயலாளராக வந்திருக்கும் அண்ணா அவர்களின் சக்தியை பலர் உணராமலேயே இருக்கின்றனர்! அவர் தனி சக்தியை பெற்றவர், தனி ஆற்றலைப் பெற்றவர்! அவர் பொதுக்குழு உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அறிஞர் அண்ணா அவர்கள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தியாக விளங்குபவர்! இதனை நாமெல்லோரும் அறிவோம்!

இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு புது சக்தியைப்பெற்று மிக்க வலிவோடும், பொலிவோடும் பீடு நடை போட இருக்கிறது! இன்றைய தினம் நமக்கு முன்னாலே இருக்கின்ற பல பணிகளை எண்ணிப் பார்த்து அதை செயலாக்க வேண்டும்! நல்ல பல ஆக்க வேலைகளைப் புரிந்து இன்னும் பொலிவும், உறுதியும் பெற வேண்டும்!

உங்களை நாங்கள் பாராட்டுவதும், எங்களை நீங்கள் பாராட்டுவதும் ஒருவருக்கு ஒருவர் பாராட்டிக் கொள்வதும் அவசியமற்றது நாம் நம் இலட்சிய நோக்கோடுதான் இங்கே பாராட்டி மகிழ்ந்துக் கொண்டிருக்கிறோம்!

இறுதியாக, பொதுச்செயலாளராக வந்திருக்கும் அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டி, நீங்களெல்லோரும் நல்ல பல பணிகளைச் செய்து, கழகத்திற்கு புது சக்தியை, பொலிவை உண்டாக்கி, நீங்களும் புது முறுக்கோடு புது வலிவையும் பெற வேண்டும் எனக் கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

(10ம் பக்கத் தொடர்ச்சி

கத்தியைக் கையில் பிடிக்கட்டும் நமக்குக் கவலைஇல்லை.

நாம் கடந்த பதினேறு ஆண்டுகளாக பல இன்னல்களுக் கிடையே வளர்ந்தோம். அதனுல் மக்களின் ஆதரவையும், அன்பையும் கொண்டுதான் எதிர்காலம்நமக்கு மிகவும் கடுமையான காலம் அந்த நேரத்தில் நாம் மிகவும் கண்யமாகவும், கட்டுப்பாடுடனுமிருந்து நமது கழகத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்றும், மேலும் மேலும் மக்கள் செல்வாக்கைப் பெருக்க வேண்டு மென்றும் கேட்டு விடை பெறுகிறேன்.

வணக்கம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 401 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.